**நி.நி.பி.பி1/7330/2007**

**ஆணையாளரின் 07.07.2008 நாளிட்ட குறிப்பு**

**14.03.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :107/2008 பொருள் எண்: 1

**வரவு செலவு திட்டம் 2008–2009 மற்றும் திருத்திய மதிப்பீடு 2007–2008 ஒப்புதல் வேண்டி**

இந்திய பெரும் கண்டத்தின் பழமை வாய்ந்த மாநகராட்சிகளில் ஒன்றாக விளங்கும் சென்னை மாநகராட்சி பாரம்பரியமும், பழமையும் பெருமையும் கொண்டதுடன் இந்தியாவிலேயே சிறந்த மாநகராட்சி எனவும் பெயர் பெற்றுள்ளது. வளர்ந்து வரும் சென்னை மாநகரின் மக்கட்தொகை பெருக்கத்தின் காரணமாக, தேவைகளை நன்கு ஆய்ந்து, அறிந்து, அவைகளை முன்னிறுத்தி, அவ்வப்போது ஆய்வு செய்து, பணிகள் தொய்வின்றி நடைபெற அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மக்களின் தேவைகளை தொடர்ந்து செயல்படுத்தும்வண்ணம், 2008–2009ம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீடு, செயல் திட்டங்கள் மற்றும் அவைகளுக்கான நிதி ஆதாரங்களை உள்ளடக்கி தயாரிக்கப்பட்டுள்ளது.

**நிதி நிலை**

2008–2009 ஆம் ஆண்டு வருவாய் தலைப்பில் வரவு ரூ.818.04 கோடியாகவும், வருவாய் செலவினம் ரூ.808.99 கோடியாகவும் இருக்கும். மூலதன வரவு ரூ.361.50 கோடியாகவும் மூலதன செலவு ரூ.374.50 கோடியாகவும் இருக்கும்.

**வருவாய் கணக்கு**

2007–2008–ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டப்படி ரூ.702.03 கோடியாக இருந்த வருவாய் கணக்கின் வரவுகள், இதே ஆண்டின் திருத்திய மதிப்பீட்டின்படி ரூ.773.10 கோடியாக நிர்ணயிக்கப்பபட்டது. 2008–2009–ஆம் ஆண்டில் இது ரூ.818.04 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. 2007–2008–ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ரூ.699.36 கோடியாக நிர்ணயிக்கப்பட்ட வருவாய் இனங்களின் செலவு, திருத்திய மதிப்பீட்டில் ரூ.759.21 கோடியாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. 2008–2009–ஆம் ஆண்டில் வருவாய் கணக்கில் செலவு ரூ.808.99 கோடியென மதிப்பிடப்பட்டுள்ளது.

**வருவாய் வரவினங்கள்**

**சொத்து வரி**

வருவாய் இனங்களில் முதன்மையாக பங்கு வகிக்கும் சொத்து வரி வசூலை பெருக்குவதற்கு பல்வேறு நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்பட்டதன் விளைவாக நடப்பு நிதியாண்டில் வரலாறு காணாத அளவில் வசூல் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

2007–2008–ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட திருத்திய மதிப்பீட்டில் ரூ.280 கோடியாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 2008–2009–ஆம் ஆண்டில் இந்த வசூல் ரூ.300 கோடி அளவில் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

**தொழில் வரி**

2007–2008–ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ரூ.63 கோடி என மதிப்பிடப்பட்டு, திருத்திய மதிப்பீட்டில் ரூ.65 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. 2008–2009–ம் ஆண்டு இவ்வரி வசூல் ரூ.70 கோடியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**அரசு ஒதுக்கீடு செய்யும் வருவாய்**

**முத்திரைத்தாள் மீதான கூடுதல் வரி**

மாநில அரசால் ஒதுக்கீடு செய்யப்படும் முத்திரைத்தாள் மீதான கூடுதல் வரி வருவாய் 2007–2008– ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீட்டில் ரூ.125 கோடியென நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 2008–2009– ஆம் ஆண்டில் இவ்வினத்தின் வருவாய் ரூ.130 கோடியாக மதிப்பிடப்படுகிறது.

**கேளிக்கை வரி**

2007–2008–ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீட்டில் கேளிக்கை வரி மூலம் கிடைக்கும் வருவாய் ரூ.10 கோடி என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தமிழக அரசு தமிழ் பெயரிடப்பட்ட தமிழ் திரைப்படங்களுக்கு கேளிக்கை வரி விதிப்பிலிருந்து முழுவதுமாக விலக்களித்துள்ளது. உள்ளாட்சி அமைப்புகளின் முக்கிய திட்டங்களுக்கு அரசு மானியம் வழங்கி இந்த வருவாய் இழப்பினை ஈடு செய்கிறது. எனவே, 2008–2009–ஆம் ஆண்டில் இத்தொகை ரூ.5 கோடியாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

**மாநில நிதிக்குழு மானியம்**

2007–2008– ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீட்டின்படி மாநில நிதிக்குழு மானியமாக அரசு வரித்தொகுப்பிலிருந்து ஒதுக்கப்படும் வருவாய் ரூ.150 கோடியாகும். இது 2008–2009–ஆம் ஆண்டில் ரூ.160 கோடியாக உயருமென எதிர்பார்க்கப்படுகிறது.

**இதர வருவாய்கள்**

தொழில் உரிமக் கட்டணம், கட்டட உரிமக் கட்டணம், அங்காடி உரிமக் கட்டணம், வாகன நிறுத்தக் கட்டணம், விளம்பர வரி மற்றும் ஏனைய வருவாய் இனங்களின் மூலம் 2007–2008 ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீட்டின்படி ரூ.143.10 கோடி வசூலாகுமென கணக்கிடப்பட்டுள்ளது. 2008–2009 ஆம் ஆண்டு இவ்வினங்களின் மூலம் ரூ.153.04 கோடி வசூலாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**வருவாய் செலவினங்கள்**

**பணியாளர் சம்பளம்**

இத்தலைப்பின் கீழ் 2007–2008 ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீட்டின்படி ரூ.221.12 கோடி செலவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. 2008–2009– ஆம் ஆண்டு இந்த செலவினம் ரூ.281.46 கோடியாக உயருமென எதிர்பார்க்கப்படுகிறது.

**ஓய்வூதியம்**

இத்தலைப்பின் கீழ் 2007–2008– ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீட்டில் ரூ.97.30 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2008–2009 ஆம் ஆண்டில் இச்செலவினம் ரூ.119.60 கோடியாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

**பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு போன்ற செலவினங்கள்**

பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு, இயக்கச் செலவுகள் மற்றும் திட்டச் செலவுகள் போன்ற செலவினங்களுக்காக 2007–2008 ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீட்டில் ரூ.152.74 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தலைப்பின் கீழ் 2008–2009 ஆம் ஆண்டு ரூ.137.83 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

**நிர்வாகச் செலவு**

இச்செலவினத்திற்கென 2007–2008 ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீட்டில் ரூ.48.54 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 2008–2009 ஆம் ஆண்டில் இத்தலைப்பின் கீழ் ரூ.42.36 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**கடனுக்கான வட்டி**

மூலதனப் பணிகளுக்கு வாங்கிய கடன்கள் மீது செலுத்த வேண்டிய வட்டிக்காக 2007–2008 ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீட்டில் ரூ.6 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 2008–2009 ஆம் ஆண்டில் இச்செலவினத்திற்கென ரூ.8.80 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மூலதன வரவுகள்**

2007–2008 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின்படி ரூ.285.90 கோடியாக நிர்ணயிக்கப்பட்ட மூலதன வரவு திருத்திய மதிப்பீட்டில் ரூ.189.10 கோடியாக நிர்ணயிக்கப்பட்டது. 2008–2009 ஆம் ஆண்டு இத்தலைப்பின் கீழ் வரவுகள் ரூ.361.50 கோடியாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

**மூலதனச் செலவுகள்**

2007–2008 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின்படி ரூ.284.95 கோடியாக மதிப்பிடப்பட்ட மூலதனச் செலவு, திருத்திய மதிப்பீட்டில் ரூ.288 கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 2008–2009 ஆம் ஆண்டு இத்தலைப்பின் கீழ் ரூ.374.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது சென்ற நிதி ஆண்டினைக் காட்டிலும் ரூ.86.50 கோடி கூடுதலாகும்.

## துறைவாரியாக 2008–2009 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படவுள்ள திட்டங்கள்

**சாலைகள் மற்றும் நடைபாதைகள்**

**2007–2008**

திருத்திய மதிப்பீட்டில் உட்புறச் சாலை பணிகளுக்கு ரூ.120 கோடியும், பேருந்து சாலை பணிகளுக்கு ரூ.33 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

**2008–2009**

சென்னை மாநகரில் விரிவாக்கப்பகுதிகள் மற்றும் பிற பகுதிகளிலுள்ள கப்பி சாலைகளை தார் சாலைகளாக மேம்படுத்துவதற்கும், குடிசைப் பகுதிகளில் வாழும் எளிய மக்களின் வாழ்க்கை தரம் உயர்ந்திட சீரான சாலை வசதி அமைக்கும் பொருட்டும், தார் சாலைகள் சிமெண்ட் கான்கிரீட் சாலைகளாக மாற்றியமைக்கவும், பாதசாரிகளின் வசதியை கருத்திற்கொண்டு நடைபாதைகள் மேம்படுத்தவும் ரூ.127 கோடி செலவிடப்படும்.

சென்னை நகரில் குறிப்பாக வடசென்னை பகுதியில் பெருகி வரும் கனரக வாகனங்களின் போக்குவரத்தை கருத்திற்கொண்டு, கனரக வாகனங்கள் செல்லும் 13 சாலைகள் சிமெண்ட் கான்கிரீட் சாலைகளாக மாற்றியமைக்கவும், பெருகி வரும் வாகனங்களின் எண்ணிக்கைக்கேற்ப சாலைகளில் வாகன நிறுத்த வசதி (Car Parking) அதிகமாக தேவைப்படுவதை கருத்திற்கொண்டு மாநகரில் முக்கிய இரண்டு இடங்களில் அடுக்குமாடி வாகன நிறுத்துமிடம் (Multi Level Car Parking) ஏற்படுத்தும் திட்டங்களுக்காகவும், முக்கிய சாலைகளை நான்கு வழிப்பாதைகளாக மாற்றி அகலபடுத்தும் பணிக்காகவும் மற்றும் பேருந்து சாலைகள் மேம்பாட்டிற்காகவும் ரூ.25 கோடி செலவிடப்படும்.

**மழைநீர் வடிகால்வாய்கள்**

**2007–2008**

மழைநீர் வடிகால்வாய்கள் அமைக்கும் பணிகளை மேற்கொள்ள திருத்திய மதிப்பீட்டில் ரூ.32 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 47.25 கி.மீ. நீளத்திற்கு ரூ.19.93 கோடி செலவில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

**2008–2009**

சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் பேருந்து சாலைகள் சிலவற்றில், மழைநீர் வடிகால்வாய் விடுபட்டுள்ளதால் மழைநீர் சாலைகளில் தேங்கி பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படுவதுடன் சாலைகளும் சேதமடைகின்றது. எனவே, பேருந்து தட சாலைகள், விடுபட்டுள்ள சாலைகள் மற்றும் சாலையின் பகுதிகளுக்கு முன்னுரிமை வழங்கி மழைநீர் வடிகால்வாய்கள் கட்டப்படும். நெடுஞ்சாலைத் துறை பராமரிப்பிலுள்ள தேசிய நெடுஞ்சாலைகளான அண்ணா சாலை, ஈ.வெ.ரா. பெரியார் சாலை, வ.உ.சி. சாலை ஆகியவற்றில் பல இடங்களில் மழைநீர் வடிகால்வாய்கள் இல்லாததால் சாலைகளில் தண்ணீர் தேங்கி பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்துவதுடன் நோய்களும் எற்படுகின்றன. எனவே இச்சாலைகளிலும் விடுபட்டுள்ள இடங்களில் மழைநீர் வடிகால்வாய்கள் கட்டப்படும்.

மேற்கண்ட பணிகளுக்காக ரூ.35 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## பாலங்கள்

**2007–2008**

பாலங்கள் கட்டும் பணிக்காக திருத்திய மதிப்பீட்டில் ரூ.17 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**2008–2009**

வடசென்னையில் உள்ள முக்கிய சந்திப்புகளான தங்கசாலை சந்திப்பில் ஓர் அகல மேம்பாலமும், வியாசர்பாடியிலுள்ள கணேசபுரம் இரயில்வே சுரங்கப்பாதையின் மேல் ஒரு மேம்பாலமும் கட்டுவதற்கான பணிகள் துவங்கப்படும். தென் சென்னையில் வாகன நெரிசல் மிகுந்த திருவான்மியூர் எல்.பி.சாலை சந்திப்பில் வாகன சுரங்கப்பாதையுடன் கூடிய மேம்பாலமும் கட்டப்படும்.

மேற்கண்ட பணிகள் மற்றும் இதர பணிகளுக்காகவும் ரூ.75 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## மின்சாரம்

**2007–2008**

புதிய தெரு மின்விளக்குகள் அமைத்தல், பழுதடைந்த மின்வடங்களை மாற்றியமைத்தல் போன்ற பணிகளுக்காக திருத்திய மதிப்பீட்டில் ரூ.20 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**2008–2009**

ஒரே நேரத்தில் அனைத்து தெரு மின்விளக்குகளையும் இயக்கிடும் பொருட்டு மேலும் 700 இடங்களில் தானியங்கி மின் விசைப்பான்கள் நிறுவப்படும். மரபுசாரா மின்சக்தியினை ஊக்குவிக்கும் பொருட்டு ஏழை எளிய மக்கள் வாழும் குடிசைப் பகுதிகளில் முதற்கட்டமாக ஒரு மண்டலத்திற்கு ஒரு குடிசை பகுதி தேர்ந்தெடுக்கப்பட்டு சூரிய ஒளியினால் இயங்கக் கூடிய சோலார் மின் விளக்குகள் அமைக்கப்படும். 6580 எண்ணிக்கையில் புதிய மின் தெருவிளக்குகள் அமைத்தல், 268 கி.மீ. நீளத்திற்கு பழுதடைந்த மின்வடங்களை மாற்றியமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும்.

மாநகராட்சியில் நடைபெறும் அனைத்து பணிகளும் ஒருங்கிணைந்து விரைவாக செயல்படும் வகையில் அனைத்து வார்டு அலுவலகங்களும் கணினிமயமாக்கப்படும்.

இப்பணிகளுக்காக ரூ.20 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## திடக்கழிவு மேலாண்மை

**2007–2008**

குப்பை கொட்டும் வளாகங்களின் மேம்பாட்டு பணிகளுக்காக திருத்திய மதிப்பீட்டில் ரூ.16 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**2008–2009**

குப்பைகளை தரம் பிரிக்கும் திட்டங்கள், அதிக கொள்ளளவு உள்ள குப்பையை நொறுக்கி மூடியபடியே எடுத்துச் செல்லும் வாகனங்கள் வாங்குதல், குப்பைகளை பதனிடுதல் மற்றும் குப்பை கொட்டும் தளங்களை நவீனப்படுத்துதல் போன்ற பணிகளுக்காகவும், குப்பை கொட்டும் வளாகங்களின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், 2008–2009 ஆம் ஆண்டில் இப்பணிகளுக்காக ரூ.25 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

## இயந்திரப் பொறியியல்

**2007–2008**

துப்புரவுப் பணிக்கான வாகனங்கள், அலுவலக பயன்பாட்டிற்கான வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் போன்றவை கொள்முதல் செய்ய திருத்திய மதிப்பீட்டில் ரூ.3 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**2008–2009**

திடக்கழிவு மேலாண்மைத் துறைக்கு வலுக்கூட்ட, பிரம்மாண்டமான குப்பையை கொத்தாக பிடித்து தூக்கும் இரண்டு இயந்திர ஊர்திகள் (Grapplers), பேருந்து சாலைகள் தூய்மைப்படுத்தும் பணிக்காக ஒரு நவீன பெருக்கும் இயந்திர வாகனம் (Mechanical Sweeper), அலுவலர்களின் ஆய்வுப் பணிக்காக மேலும் 8 மகேந்திரா பொலேரோ ஈப்புகள், மண்டல குப்பை மாற்று நிலையங்களில் கனரக வாகனத்திற்கு குப்பையினை வாரி சேகரிக்கும் முன்புற வாளியுடன் கூடிய அதிகப்பளு கொண்ட வாகனம், செயலிழந்த வாகனங்களை மீட்பதற்கான இரண்டு மீட்பு வாகனங்கள் (Recovery Van) போன்ற வாகனங்கள் வாங்குவதற்கும், புதியதாக எடை போடும் இரண்டு மேடைகள் கணினி வசதியுடன் கொடுங்கையூர் மற்றும் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகங்களில் நிறுவுவதற்கும் ரூ.2 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**கட்டடங்கள்**

**2007–2008**

பல்வேறு கட்டடப் பணிகளுக்காக திருத்திய மதிப்பீட்டில் ரூ.13 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**2008–2009**

தண்டையார்பேட்டை தொற்று நோய் மருத்துவமனையினை மேம்படுத்தும் பொருட்டு நவீன வசதிகளுடன் கூடிய மருத்துவமனை கட்டுவதற்கும், பெரம்பூரில் அமைந்துள்ள இறைச்சிக்கூடம் வடிவமைத்தல், கட்டுதல், இயக்குதல் மற்றும் ஒப்படைத்தல் முறையில் நவீனப்படுத்தப்படுவதற்கும், மைலேடீஸ் பூங்காவிலுள்ள உபயோகமற்ற நிலையிலுள்ள பழமை வாய்ந்த ராயல் நீச்சல் குளம் நவீன வசதிகளுடன் புதுப்பித்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும். அண்ணா நகர் தொகுதிக்குட்பட்ட செனாய் நகரிலும், வடசென்னை பேசின் பால சாலையிலும் சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் நவீன குளிர்சாதன வசதியுடன் கூடிய இரண்டு கலையரங்கங்கள் கட்டப்படும்.

பொதுமக்கள் அதிகமாக நடமாடும் இடங்கள் மற்றும் தெருக்களின் ஒதுக்குப்புறங்களில் சுற்றுப்புற சூழ்நிலையை பாதுகாக்கும் பொருட்டும், சுகாதார சீர்கேட்டினை தவிர்க்கும் பொருட்டும் சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட 100 இடங்கள் கண்டறியப்பட்டு நவீன வசதிகளுடன் கூடிய புதிய சிறுநீர் கழிப்பிடங்கள் கட்டப்படும்.

சென்னை மாநகராட்சி மண்டல அலுவலகம்–2 மற்றும் மண்டல அலுவலகம்–5 ஆகியவற்றிற்கு புதிய மண்டல அலுவலக கட்டிடங்கள் கட்டுதல், ரிப்பன் மாளிகை வளாகத்தில் வடபுறத்திலுள்ள காலியிடத்தில் நவீன வசதிகளுடன் கூடிய ஒரு கூடுதல் அலுவலக கட்டடம் கட்டுதல், சென்னை மாநகராட்சி பள்ளிகளில் சுமார் 35 வகுப்பறைகள் மற்றும் 10 அறிவியல் ஆய்வுக் கூடங்கள் கட்டுதல், கோட்டம் 48, 64, 66, 128, 129 மற்றும் 145–க்கு புதியதாக நவீன வசதிகளுடன் கூடிய வார்டு அலுவலகங்கள் கட்டுதல் போன்ற மேற்கண்ட பணிகளுக்கு ரூ.20 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பூங்காக்கள்**

**2007–2008**

சென்னை மாநகராட்சி பூங்காக்கள் மற்றும் விளையாட்டு திடல்களை மேம்படுத்தும் பொருட்டு திருத்திய மதிப்பீட்டில் ரூ.12 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**2008–2009**

மண்டலம்–8, கோட்டம் 126ல் உள்ள நடேசன் பூங்காவினை மேம்படுத்துதல், மண்டலம்–5, கோட்டம்–68ல் அண்ணா நகரில் அமைந்துள்ள புகழ் பெற்ற டாக்டர் விஸ்வேஸரய்யா பூங்கா நவீன வசதிகளுடன் மேம்படுத்துதல், தியாகராய நகரில் அமைந்துள்ள பழம்பெரும் பனகல் பூங்கா ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் சிறப்பான முறையில் வடிவமைத்து எழிலூட்டுதல், மண்டலம்–9, கோட்டம்–138ல் கோட்டூர்புரம் அடையாற்றின் கரையில் இயற்கை நிலக்காட்சியுடன் புதிய பூங்கா அமைத்தல், சென்னை மாநகரில் பசுமையை மெருகூட்ட 10,000 மரக்கன்றுகள் முக்கிய சாலைகள் மற்றும் பொது இடங்களில் நடப்பெற்று இரும்பு வலையிலான காப்புக்கூடுகள் அமைத்தல், மாநகராட்சியிலுள்ள விளையாட்டுத் திடல்களில் 20 விளையாட்டுத் திடல்களை தேர்ந்தெடுத்து அவற்றை மேம்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும். சென்னையிலுள்ள அனைத்து இடுகாடுகளும் முறையாக வரையுறுத்தி, எழிலூட்டி, இயற்கை நிலக்காட்சியுடன் (Landscaping) பசுமைப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

இப்பணிகளுக்காக ரூ.5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

<u>நி.நி.பி.பி1/7330/2007</u>

**கல்வி**

**2007–2008**

கல்வித்துறைக்கு திருத்திய மதிப்பிட்டில் ரூ.1.50 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**2008–2009**

சென்னை மாநகராட்சி பள்ளிகளில் படிக்கும் மாணவ / மாணவியரின் கல்வித் தரம் உயரவும், ஊக்குவிக்கும் பொருட்டும் பல்வேறு ஊக்கப் பரிசுகள் வழங்கப்படும். சமுதாய கல்லூரிகளில் மூன்று புதிய பாடப்பிரிவுகள் துவங்கப்படுவதுடன் வடசென்னையில் பயிலும் மாணவர்கள் பயனடையும் வகையில் புதியதாக மற்றொரு சமுதாய கல்லூரி ஆரம்பிக்கப்படும். அனைத்து தொடக்க, நடுநிலை, உயர்நிலை, மேனிலை மற்றும் மண்டல மையப் பள்ளிகளுக்கு ரூ.3 கோடி செலவில் கணினிகள் மற்றும் உபகரணங்கள் எல்காட் நிறுவனம் மூலம் வாங்கி வழங்கப்படும். பள்ளிகளின் நிர்வாகத் திறனை மேம்படுத்தும் பொருட்டு உயர்நிலை / மேனிலை பள்ளிகள், மண்டல மையப்பள்ளிகள் மற்றும் கல்வித்துறை தலைமை அலுவலகத்திற்கு தொலை நகல் இயந்திரம் வழங்கப்படும். பள்ளிகளுக்கு இருவர் இருக்கைகள் (Dual Desk) வாங்கி வழங்கப்படும்.

மேற்கண்ட பணிகளுக்காக ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சுகாதாரம்**

**2007–2008**

சுகாதாரத்துறைக்கு திருத்திய மதிப்பீட்டில் ரூ.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2008–2009**

இறந்தவர்களின் இறுதி பயணத்தில் சென்னை மாநகராட்சி பங்கு வகிப்பது ஓர் உன்னத மனிதாபிமான செயல் என்பதை கருத்திற்கொண்டு மாநகராட்சி மயானங்களில் தகனம் மற்றும் அடக்கம் இலவசமாக செய்வதுடன், குளிர்சாதன அமரர் பெட்டி மற்றும் அமரர் ஊர்தியும் இலவச சேவையாக செய்யும் பொருட்டு, 30 குளிர்சாதன அமரர் பெட்டிகள் மற்றும் 10 அமரர் ஊர்திகள் பொதுமக்கள் சேவைக்காக பயன்படுத்தப்படும்.

சென்னை மாநகராட்சி அனைத்து மருந்தகங்களிலும் முதன்முறையாக சர்க்கரை அளவை கண்டறியும் (Glucometer) கருவிகள், கொசுக்களை கட்டுப்படுத்த வாகனத்தில் பொருத்தப்பட்ட 10 பெரிய புகைபரப்பும் இயந்திரங்கள் மற்றும் 100 சிறிய புகைபரப்பும் இயந்திரங்கள் வாங்கப்படும். மேலும் வடசென்னையில் ஏழை எளிய மக்களின் பயன்பாட்டிற்காக கூடுதலாக ஒரு நவீன பகுப்பாய்வு கூடம் நிறுவப்படும். நிர்வாகத் திறனை மேம்படுத்தும் பொருட்டு சுகாதாரத் துறையிலுள்ள அனைத்து மருந்தகங்களும் கணினிமயமாக்கப்படும்.

இப்பணிகளுக்காக ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மாவட்ட குடும்ப நலம்**

**2007–2008**

மாவட்ட குடும்ப நலத்துறைக்கு திருத்திய மதிப்பீட்டில் ரூ.1.50 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**2008–2009**

கர்ப்பிணி தாய்மார்கள் பயன்பெறும்வண்ணம் அனைத்து நலவாழ்வு மையங்களுக்கும் அல்ட்ரா ஸ்கேன் கருவிகள் வழங்குதல், மார்பக புற்றுநோய் கண்டறியும் கருவியான சோனோ மேமோகிராம் கருவிகள் இரண்டு எண்ணிக்கையில் வாங்குதல், நலவாழ்வு மையங்களுக்கு கணினிகள் வாங்குதல், 10 மகப்பேறு நிலையங்களிலுள்ள பிரசவ அறைகளுக்கு குளிர்சாதன வசதி செய்தல், 8 மண்டலங்களில் ஒரு மருத்துவமனை வீதம் 8 மருத்துவமனைகளில் 24 மணி நேர மகப்பேறு சேவை விரிவுப்படுத்துதல், கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஆரோக்கியமான குழந்தையை பெற்றெடுக்கும் விதமாக எச்.ஐ.வி. பரிசோதனை மற்றும் சிகிச்சை அளித்தல், சென்னை மாநகரில் வாழும் அனைத்து மகளிரும் பயன்பெறும் வகையில் 30 சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும்.

இப்பணிகளுக்கென ரூ.3.75 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு திட்டம்

**2007–2008**

இத்திட்டத்திற்காக ரூ.16 கோடி திருத்திய மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

**2008–2009**

மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டுத் திட்டத்திற்காக ரூ.23.25 கோடி நிதி ஒதுக்கப்பட்டு, இவ்வாண்டும் இத்திட்டம் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

## மேயர் சிறப்பு மேம்பாட்டுத் திட்டம்

**2007–2008**

இத்திட்டத்திற்காக ரூ.50 இலட்சம் ஒதுக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**2008–2009**

இவ்வாண்டும் இத்திட்டத்திற்காக ரூ.50 இலட்சம் ஒதுக்கீடு செய்து தொடர்ந்து பணிகள் மேற்கொள்ளப்படும்.

10.03.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தின் தீர்மான எண்.39, நாள்: 10.03.2008ன்படி, 2007–2008ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீட்டிற்கும் 2008–2009ஆம் ஆண்டின் வரவு – செலவு திட்டத்திற்கும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) ஒப்புதல் அளித்து மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘இதற்கு மன்றம் ஒப்புதல் அளிக்கின்றது’’

// உண்மைச் சுருக்கம் //

**மன்றச்செயலாளர்**

கோப்பு : நி.நி.பி.
நகல் : நி.ஆ., த.பி. & மு.க.(த 1)அ., செ–18.

நி.நி.பி.எண்: பி1 / 7330– அ / 2007.
ஆணையாளரின் 07.07.2008 நாளிட்ட குறிப்பு

**14.03.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :108/2008 பொருள் எண்: 2

**வரவு செலவு திட்டம் – தொடக்கக் கல்வி நிதி – திருத்திய மதிப்பீடு 2007–2008 மற்றும் வரவு செலவு திட்டம் 2008–2009 – அனுமதி கோருதல்.**

*****

தமிழ்நாடு தொடக்கக் கல்வி சட்டம் 38–ன்படி தொடக்கக் கல்வி நிதிக்கான 2007–2008 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு மற்றும் 2008–2009 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்திற்கான அனுமதி கோரப்படுகிறது. அரசாணை எண்: 702, கல்வித் துறை, நாள்: 23.05.1996–ல் சென்னை மாநகராட்சியின் கல்வித் துறையில் பணிபுரியும் ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாதவர்களை அரசு ஊழியர்களாக மாற்றம் செய்ய ஆணையிட்டது. அரசாணை எண்: 131, கல்வித் துறை, நாள்: 01.02.1991–ல் சென்னை மாநகராட்சி ஆணையர் அல்லது அவரால் நியமிக்கப்பட்டவர்கள் மாநகராட்சிப் பள்ளிகளை நடத்தி மற்றும் பராமரித்திட ஆணையிட்டது. சென்னை மாநகர தொடக்கப் பள்ளி, உயர்நிலை மற்றும் மேனிலைப் பள்ளிகளில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களுக்கும் அரசே 01.04.1990 முதல் மாத சம்பளத்தை அரசாணை எண்: 347, கல்வித் துறை, நாள்: 09.03.1990–ன்படி வழங்கி வருகிறது. 01.04.1990–க்கு பின் கல்வித் துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்கள் அனைவருக்கும் மாநகராட்சியே ஓய்வூதியம் வழங்கி வந்தது. 01.10.2002 முதல் அரசு நிதியிலிருந்து மேற்கொள்ளப்படுகிறது.

அரசு இப்பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாதவர்களுக்கு மாத சம்பளம் மற்றும் சில்லறை செலவினங்களை மட்டுமே வழங்கி வருகிறது. மாநகராட்சி தொடக்கப் பள்ளிகளுக்கு ஆகும் செலவினங்களை பள்ளி கட்டடங்களை பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல், ஓய்வூதியம் வழங்குதல் மற்றும் நிர்வாக செலவுகள் இந்த தொடக்கக் கல்வி நிதியிலிருந்தே மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்தொடக்கக் கல்வி நிதிக்கான முக்கிய ஆதாரம் சொத்து வரியோடு வசூலிக்கப்படும் தொடக்கக் கல்வி வரியேயாகும். மாநகராட்சி பள்ளிகளுக்கு கட்டடங்களை கட்டுதல், தளவாடங்கள் வாங்குதல், கணினிகள் வாங்குதல் போன்ற பல பணிகளை மாநகராட்சியே மேற்கொண்டு அதற்குரிய செலவுகளை இந்த நிதியிலிருந்து மேற்கொண்டு வருகிறது. உயர்நிலை மற்றும் மேனிலைப் பள்ளிகளின் பழுதுபார்க்கும் பணிகளும் முதலில் மாநகராட்சியின் பொது நிதியிலிருந்து செலவழிக்கப்பட்டு பிறகு தொடக்கக் கல்வி வரியில் சரி கட்டப்படுகிறது. மேற்கூறியவற்றை கருத்திற்கொண்டு மாநகராட்சி திருத்திய மதிப்பீடு 2007–2008 மற்றும் வரவு செலவு திட்டம் 2008–2009–யினை தயாரித்து இத்துடன் சமர்ப்பிக்கப்படுகிறது.

**திருத்திய மதிப்பீடு 2007–2008**

திருத்திய மதிப்பீட்டின்படி இந்நிதிக்கு வரவு ரூ. 62.33 கோடி ஆகும். செலவு ரூ. 43.52 கோடி ஆகும்.

**வரவு செலவு திட்டம் 2008–2009**

இந்நிதியாண்டில் தொடக்கக் கல்வி நிதியின் வரவு ரூ. 66.76 கோடி ஆகும். செலவு ரூ. 49.14 கோடி ஆகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

அரசாணை (நிலை) எண்: 65, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்: 02.03.1999–ல் அரசு தொடக்கக் கல்வி வரி மூலம் வசூலிக்கப்படும் தொகையை தொடக்கப் பள்ளிகள், உயர்நிலை மற்றும் மேனிலைப் பள்ளிகளின் மேம்பாட்டிற்கு செலவழிக்க ஆணையிட்டுள்ளது. அதன்படி பல முக்கிய பணிகளை மாநகராட்சி இப்பள்ளிகளில் நிறைவேற்றி வருகிறது. மாநகராட்சி பள்ளிகளின் கல்வி தரம் உயர்த்தும் நோக்கோடு பல நற்பணிகளையும் தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேனிலைப் பள்ளிகளில் மேற்கொண்டுள்ளது. புதிய வகுப்பறைகளை மாணவர்களின்

<u>நி.நி.பி.எண்: பி1 / 7330– அ / 2007.</u>

எண்ணிக்கைக்கு தகுந்தவாறு மாநகராட்சி கட்டியுள்ளது. எனவே 100 விழுக்காடு தொடக்கக் கல்வி வரியினை மாநகராட்சியே தன் வசம் வைத்து கொள்ளவும், ஏனைய பணிகளுக்கும், கல்வி சம்மந்தப்பட்ட பணிகளுக்கும் செலவழிக்க ஆணை வேண்டி அரசுக்கு ஒரு பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது.

2007–2008–ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீட்டிற்கும், 2008–2009–ஆம் ஆண்டின் வரவு செலவு திட்டத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

10.03.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண்.37, நாள்.10.03.2008ன்படி 2007–2008ஆம்ஆண்டின் திருத்திய மதிப்பீட்டிற்கும் 2008–2009ஆம் ஆண்டின் வரவு–செலவு திட்டத்திற்கும் நிலைக்குழு(கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)யின் மூலமாக மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்பிக்கப்படுகிறது.

10.03.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தின் தீர்மான எண்.40, நாள்: 10.03.2008ன்படி, 2007–2008ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீட்டிற்கும் 2008–2009ஆம் ஆண்டின் வரவு – செலவு திட்டத்திற்கும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) ஒப்புதல் அளித்து மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

“இதற்கு மன்றம் ஒப்புதல் அளிக்கின்றது”

// உண்மைச் சுருக்கம் //

**மன்றச்செயலாளர்**

கோப்பு : நி.நி.பி.

நகல் : நி.ஆ., த.பி. & மு.க.(த 1)அ., செ–18.